IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

அசல் வழக்கு எண். 252/2018

சாட்சி : PW– 1
பெயர் : திரு. நடராஜன் தேதி : 12.07.2022

<u>குறுக்குவிசாரணை (1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்)</u> :–

ஜெகநாதன் பாகப்பிரிவினை மூலம் தனக்கு பிரிந்த சொத்தை என்னிடம் தொகை பெற்றுக்கொண்டு என்னையே பராமரித்துக்கொள்ள சொன்னதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண். 189/2014 என்ற வழக்கில் நான் தாக்கல் செய்த பதில் உரையில் ஜெகநாதன் என்னிடம் பணம் பெற்றுக்கொண்டு சொத்தை எனது பராமரிப்பில் விட்ட விவரத்தை சொல்லியுள்ளேனா என்று ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த அ.வ.எண். 927/2013 வழக்கிலும் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்று ஞாபகமில்லை. 11.03.2010ம் தேதி நான் ஒரு கார்த்திக் என்பவருக்கு ஒரு சொத்தை கிரயம் செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கார்த்திக் என்பவருக்கு கிரயம் செய்துகொடுத்த சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் ஜெகநாதனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சாட்சி ஜெகநாதனுக்கு திருமணமே நடைபெறவில்லை என்று கூறினார். 2ம் பிரதிவாதி சக்திவேல் என்மீது சேலம் நில அபகரிப்பு பிரிவில் 28.04.2014ல் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரின்பேரில் குற்ற எண். 6/2014ல் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் வாரிசு சான்றிதழ் ரத்து செய்யப்பட்டது என்று நான் கூறியுள்ளேன். வா.சா.ஆ.–4 ஆவணத்தில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவிடப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சக்திவேல் மீது நான் தாக்கல் செய்த அ.வ.எண். 927/2013

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதி அ.வ.எண். 189/2014 ல் தன்னையும் தனது தாயாரையும் ஜெகநாதன் என்பவரின் வாரிசுதாரராக அறிவிக்க கோரி ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அ.வ.எண். 189/2014 ல் மேல்முறையீடு நிலுவையில் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகள் ஜெகநாதன் என்பவரின் வாரிசுதாரர் என்ற முறையில் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மற்ற பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை மறைத்து நான் பொய்யாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

( 4, 8, 9, 10, 12 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.